**மஞ்சளுடன் கூட்டணி போடும்**

பூச்சி,நோய் தாக்குதல் இல்லை.ஊடுபயிர் மூலம் கூடுதல் வருமானம். மஞ்சள் விவசாயத்தில் வருமானம் எடுக்க, குறைந்தபட்சம் ஓராண்டுக்குக் காத்திருக்க வேண்டும் என்பதால், ஊடுபயிர் மூலமாக இடையில் ஒரு வருவாயைப் பார்த்துவிடுவது பலருடைய வழக்கமாக இருக்கிறது. வருவாய்க்கு வருவாய் என்பதோடு, மஞ்சள் சாகுபடிக்கான செலவுகளையும் இதிலேயே சமாளித்துவிட முடியும் என்பதுதான் இதிலிருக்கும் சூட்சமம்! திருவண்ணாமலை மாவட்டம், காந்தப்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த ராஜாராம், இந்த சூட்சமத்தைக் கடைபிடித்து, இயற்கை வழி விவசாயத்தில் போதுமான மகசூலைப் பார்த்து வருகிறார்.

இயற்கை வழி விவசாயம் மூலமாக கேந்தி பூ (சாமந்திப் பூ), கோழிக்கொண்டை, வெங்காயம் இவற்றையெல்லாம் மஞ்சளுக்கு இடையில் ஊடுபயிராக சாகுபடி செய்கிறார். இலாபம், மஞ்சளுக்கான செலவுக்கு ஈடு இதையெல்லாத்தையும் தாண்டி இதன் மூலமாக பூச்சி மற்றும் நோய்களையும் கட்டுப்படுத்த முடியுது என்று ஆச்சரியம் பொங்கச் சொல்லும் ராஜாராம், கேந்தி பூக்களைப் பறித்தபடியே தொடர்ந்தார்.



மஞ்சளுக்கு ஊடுபயிராக கேந்தி... கோழிக்கொண்டை

**வியாபாரத்திலிருந்து விவசாயத்துக்கு!**

"பத்தாவது முடிச்சுட்டு, அப்பாவுக்கு உதவியாக விவசாயத்தில் இறங்கியிருக்கிறார். மூன்று வருடம் விவசாயத்தைப் பார்த்த பிறகு, அரிசி வியாபாரத்தைப் பார்ப்பதற்காக ஆரணிக்குப் போயிருக்கிறார். பிறகு, குடும்ப சொத்தில் நாலரை ஏக்கர் நிலம் கிடைத்து அரிசி வியாபாரத்தோடு விவசாயத்தையும் கவனிக்க ஆரம்பித்திருக்கிறார். அந்த சமயத்தில் திருவண்ணாமலையில் 'இயற்கை வேளாண் விஞ்ஞானி' நம்மாழ்வாரோட பயிற்சி நடக்க, அதில் கலந்து கொண்டு இயற்கை விவசாயத்தின் மேல் ஆர்வம் வந்ததாக கூறுகிறார். அதன்பின் தமிழ்நாட்டில் இருக்கும் நிறைய இயற்கை விவசாயிகளைப் பார்த்து, நிறைய விவரங்களைத் தெரிந்துகொண்டு, முழுவதுமாக இயற்கை விவசாயத்தில் இறங்கியிருக்கிறார். இப்பொழுது 'பசுமை விகடன்'

மூலமாவும் நிறைய விஷயங்களைத் தெரிந்து கொண்டதாகக் கூறுகிறார்.

**திட்டம் போட்டு விவசாயம்!**

நான்கு ஏக்கரிலும் பட்டத்துக்கேற்ற மாதிரி பயிர்களை சாகுபடி செய்கிறார். இயற்கை விவசாயம் மூலமாக ஏக்கருக்கு 24 மூட்டை (75 கிலோ) வரைக்கும் நெல் மகசூல் கிடைக்கிறது. இப்பொழுது, 1 ஏக்கர் 30 சென்டில் கரும்பு, 1 ஏக்கர் 80 சென்டில் மக்காச்சோளம் கடலை, 38 சென்டில் மஞ்சள், 35 சென்டில் சம்பங்கி, 30 சென்டில் வாழை, 15 சென்டில் மாட்டுக்குத் தேவையான தீவனம், 7 சென்டில் வீட்டுக்கு தேவையான காய்கறிகள் என்று நிலத்தைப் பிரித்து திட்டம் போட்டு விவசாயம் செய்கிறார். மஞ்சளுக்கிடையில் கோழிக்கொண்டை, கேந்தி பூ, வெங்காயம் என்று போட்டிருக்கிறார். வெங்காயம் அறுவடை முடிந்துள்ளது. பூவெல்லாம் அறுவடையில் இருப்பதாக சொன்னவர், மஞ்சள் மற்றும் அதன் ஊடுபயிருக்கான சாகுபடித் தொழில்நுட்பங்கள் பற்றி பகிர்ந்தார்.

**களைகளைக் கட்டுப்படுத்தும் மாட்டு உழவு!**

சின்ன வெங்காயத்தின் வயது 80 நாட்கள். கேந்தி பூ மற்றும் கோழிக்கொண்டைப் பூ ஆகியவற்றின் வயது 110 நாட்கள். மஞ்சளின் வயது 330 நாட்கள் (11 மாதங்கள்). இவற்றுக்கு வடிகால் வசதியுடைய அனைத்து மண் வகைகளும் ஏற்றது. வைகாசி மற்றும் ஆனி ஆகிய பட்டங்கள் ஏற்றவை. சாகுபடி நிலத்தில் 3 டன் தொழுவுரத்தைக் கொட்டி, மாடுகள் மூலமாக இரண்டு சால் உழவு செய்து, தண்ணீர் கட்ட வேண்டும். 10 நாட்கள் கழித்துப் பார்த்தால் நிலத்தில் களைகள் முளைத்திருக்கும். அவற்றை குறுக்கு, நெடுக்காக இரண்டு சால் உழவு செய்ய வேண்டும். இப்படிச் செய்வதால், களைகளைக் கட்டுப்படுத்த முடியும். ஒரு வாரம் கழித்து, மண் காய்ந்திருக்கும் நிலையில், மீண்டும் ஓர் உழவு செய்து மண்ணை பொலபொலப்பாக மாற்ற வேண்டும். பிறகு, இரண்டரை அடி இடைவெளியில் ஏர் கலப்பை மூலம் பார் ஓட்டி, மண்வெட்டி மூலமாக பாரை சரி செய்து கொள்ள வேண்டும்.

**ஒன்றரையடி இடைவெளி!**

பாரின் ஒரு பக்கத்தில், முக்கால் அடிக்கு ஒரு வெங்காயத்தை புழுதி நடவாக நடவு செய்ய வேண்டும். பொதுவாக வெங்காயத்தை ஈர நடவாகத்தான் நடுவார்கள். ஆனால், புழுதி நடவாக நட்டு பிறகு, நீர் பாய்ச்சினால் முளைப்புத் திறன் நன்றாக இருக்கும். வெங்காயத்தை நடவு செய்த பிறகு தண்ணீர் கட்டி, விதைநேர்த்தி செய்த மஞ்சள் கிழங்குகளை பாத்தியின் மறுபக்கத்தில் ஒன்றரை அடிக்கு ஒன்று வீதம் நடவு செய்ய வேண்டும். பாரின் மையத்தில் ஒன்றரை அடிக்கு ஒரு கேந்தி அல்லது கோழிக்கொண்டை நாற்றை நடவு செய்ய வேண்டும் (இவர் 38 சென்ட்

நிலத்தையும் இரண்டாகப் பிரித்து, ஒரு பகுதியில் கேந்தியையும், மற்றொருப் பகுதியில் கோழிக்கொண்டையையும் ஊடுபயிராக சாகுபடி செய்திருக்கிறார்). நடவு செய்த 4-ம் நாள் தண்ணீர் கட்ட வேண்டும். இம்முறையில் நடுவதற்கு 38 சென்ட் நிலத்துக்கு 210 கிலோ விதைமஞ்சள், 90 கிலோ விதைவெங்காயம் மற்றும் கோழிக்கொண்டை, கேந்தி விதைகள் தலா 50 கிராம் வீதம் தேவைப்படும்.

**பூச்சிகளைக் கட்டுப்படுத்தும் கேந்தி!**

7-ம் நாளில் வெங்காயமும், 30-ம் நாளில் மஞ்சளும் முளைத்து வரும். மண்ணின் ஈரப்பதத்தைப் பொறுத்து 7 முதல் 10 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் கட்ட வேண்டும். 30 மற்றும் 45-ம் நாட்களில் களை எடுக்க வேண்டும். இரண்டாவது களை எடுத்த பிறகு, 50 கிலோ மண்புழு உரம், 10 கிலோ வேப்பம் பிண்ணாக்கு, 2 கிலோ அசோஸ்பைரில்லம், 2 கிலோ பாஸ்போ-பாக்டீரியா, 2 லிட்டர் பஞ்சகவ்யா ஆகியவற்றைக் கலந்து, 24 மணி நேரம் வைத்திருந்து, பிறகு நிலத்தில் தூவ வேண்டும். 20 நாட்களுக்கு ஒரு முறை 48 லிட்டர் தண்ணீரில் 2 லிட்டர் பஞ்சகவ்யாவைக் கலந்து தெளிக்க வேண்டும். ஊடுபயிராக கேந்தி சாகுபடி செய்வதால் பெரும்பாலான பூச்சிகள் கட்டுப்படுகின்றன. தேவைப்பட்டால் மட்டும், மூலிகைப் பூச்சிவிரட்டி தெளித்துக் கொள்ளலாம். இயற்கை வழி விவசாயம் என்பதால், நோய்களும் பெரிதாக வருவதில்லை. ஊடுபயிர்களை அறுவடை செய்த பிறகு, அந்தச் செடிகளை, அப்படியே மஞ்சள் செடிகளைச் சுற்றி மூடாக்காகப் போட வேண்டும். கூடவே 50 கிலோ மண்புழு உரம், 10 கிலோ வேப்பம் பிண்ணாக்கு, 2 கிலோ அசோஸ்பைரில்லம், 2 கிலோ பாஸ்போ-பாக்டீரியா, 2 லிட்டர் பஞ்சகவ்யா ஆகியவற்றை கலந்து ஒவ்வொரு மஞ்சள் செடிக்கும் நிரந்து இட்டு, மண் அணைத்து விட வேண்டும்.

சாகுபடிப் பாடத்தை முடித்த ராஜாராம், வெங்காயத்தை 80 நாள்ல அறுவடை செய்ததில் 38 சென்டில் இருந்து 480 கிலோ வெங்காயம் கிடைத்திருப்பதாகவும், சேதாரம், காய்ச்சல் போக எப்படியும் 450 கிலோ கிடைக்கும் என்றும் கிலோவுக்கு சராசரியா 30 ரூபாய் விலை கிடைத்தாலும் 13,500 ரூபாய் வருமானம் கிடைக்கும் என்றும் கூறுகிறார்.
கோழிக்கொண்டை 40 நாட்களில் பூவெடுக்க ஆரம்பிக்கும். 60-ம் நாளுக்கு மேல் ஐந்து நாட்களுக்கு ஒரு முறை அறுவடை பண்ணலாம். 10 முறை அறுக்கலாம். ஒரு அறுப்புக்கு சராசரியாக 30 கிலோ என்று மொத்தம் 300 கிலோ வரைக்கும் பூ கிடைக்கும்.

கிலோவிற்கு சராசரி விலையாக 15 ரூபாய் கிடைத்தாலும் 4,500 ரூபாய் கிடைக்கும். கேந்தி 50 நாட்களில் பூவெடுக்க ஆரம்பிக்கும். 70-ம் நாளில் இருந்து அறுவடை செய்யலாம். மொத்தம் எட்டு அறுவடைக்கும் சேர்த்து 200 கிலோ அளவுக்கு மகசூல் கிடைக்கும். கிலோ, சராசரியாக 30 ரூபாய்க்கு விற்றாலும் 6,000 ரூபாய் கிடைக்கும். 11-ம் மாதத்தில் மஞ்சளை அறுவடை செய்யலாம். 38 சென்டில் இருந்து 10 குவிண்டால் வரைக்கும் மகசூல் கிடைக்கும். இப்பொழுது குவிண்டால் 5 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. இருப்பு வெத்ததிலிருந்து விலை ஏறும்போதுதான் விற்பதாக கூறுகிறார். மொத்தமாக 38 சென்ட் நிலத்தில் இருந்து 74,000 ரூபாய்

வரைக்கும் வருமானம் கிடைக்கும். செலவு போக 34,000 ரூபாய் வரை லாபம் என்கிறார்.

**தொழுவுரம் தயாரிப்பு**

குப்பைக்குழியில் இருக்கும் மட்கிய எருவைக் களைத்து வெப்பம் வெளியேறும் அளவுக்கு தண்ணீர் விட்டு, 25 நாட்கள் இடைவெளியில் மீண்டும் களைத்து, அவற்றில் முளைத்திருக்கும் களைச் செடிகளை அகற்ற வேண்டும். 50-ம் நாள் அந்த எருவை எடுத்துப் பயன்படுத்தலாம்.

**ஒரு பாத்தி ஒரு கூடை எரு**

10 அடி நீளம், 5 அடி அகலத்தில் இரண்டு மேட்டுப்பாத்திகள் அமைத்து, ஒவ்வொரு மேட்டுப்பாத்திக்கும் ஒரு கூடை எருவை கொட்டி கிளறி சமப்படுத்தினால் நாற்றங்கால் தயார். ஒரு பாத்தியில் கோழிக்கொண்டை விதையையும், மற்றொரு பாத்தியில் கேந்தி விதையும் தூவ வேண்டும். பின்னர் எரு அல்லது மணலை லேசாகத் தூவி தென்னை மட்டையால் மூடி வைத்து, தினம் தண்ணீர் தெளித்து வந்தால், 7-ம் நாளில் முளைப்பு எடுத்து விடும். 15-ம் நாளில் 5 லிட்டர் தண்ணீரில் 200 மில்லி பஞ்சகவ்யாவைக் கலந்து தெளிக்க வேண்டும். 30-ம் நாளில் நாற்று தயாராகி விடும்.

**விதைநேர்த்தி**

சூடோமோனஸ், டிரைக்கோடெர்மா விர்டி, அசோஸ்பைரில்லம், பாஸ்போ-பாக்டீரியா ஆகியவற்றை தலா ஒரு கிலோ எடுத்துக் கொண்டு, ஒரு லிட்டர் பஞ்சகவ்யாவை அதில் சேர்த்துக் கலக்க வேண்டும். இதை 30 லிட்டர் தண்ணீரில் கலக்க வேண்டும். மஞ்சள் விதைக் கிழங்குகளை இந்தக் கரைசலில் நனைத்து எடுத்து, நிழலில் உலர்த்தி நடவு செய்ய வேண்டும்.

**தொடர்புக்கு:**
ராஜாராம்,
அலைபேசி (செல்போன்): 97878-27898.

---

**ஆதாரம்** : www.vikatan.com பசுமை விகடன் வெளியிட்டான தேதி, 10.10.2011